


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 10.10.2018

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்











## தமிழக நிகழ்வுகள்

- தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட தலைமையகங்களிலும் காவல்துறை ஆணைய அலுவலகங்களிலும் புதிய **கைரேகை அடையாளம் காணும்** அமைப்பான **FACTS 7.0 (Fingerprint Analysis and Criminal Tracing System** - கைரேகை பகுப்பாய்வு மற்றும் குற்றவியல் கண்காணிப்பு அமைப்பு ) என்ற அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.
  - இது சென்னையின் மாநில ஆவணக் காப்பகத்தின் **(SCRB – State Crime Records Bureau's) - தரவுத் தளத்துடன்** இணைக்கப்பட உள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- இணையப் பாதுகாப்புத் துறையில் **பெண் பொறியியல் பட்டதாரிகளின் திறன்களை** வளர்ப்பதற்காக, மைக்ரோசாப்ட் **இந்தியா மற்றும் இந்திய தரவு பாதுகாப்பு ஆணையம்** (DSCI – **Data Security Council of India)** ஆகியவை இணைந்து சைபர் ஷிக்ஷா (**Project Cyber Shiksha**) என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இது **மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின்** (MEITY) கீழ் செயல்பட உள்ளது.

- ஒடிசா மாநிலத்தில் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் தொழில் நுட்ப கல்விக்கு நிதியுதவியளிப்பதற்காக, ஒடிசா மாநிலமானது **"நிர்மான் குசுமா" (Nirman Kusuma)** என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.
  - இத்திட்டத்துடன், அம்மாநில அரசானது மாணவிகளுக்கான நிதியுதவியை 20% உயர்த்தியுள்ளது.

- மத்திய வங்க கடலில் ஏற்பட்டுள்ள புயலுக்கு **"தித்லி"** என

பெயரிடப்பட்டுள்ளது. இப்பெயரானது **பாகிஸ்தான்** சார்பில் வழங்கப்பட்டுள்ளது.

- இப்புயலானது **ஆந்திரா – ஒடிஷா** எல்லைகளின் கடலோரப் பகுதிகளை பலத்த சூறாவளி காற்றுடன் கடக்க உள்ளதாக மத்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

## உலக நிகழ்வுகள்

- பயங்கர போர் ஆயுதங்கள் மற்றும் அணு ஆயுதங்களுடன் சுமார் 1300 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று தாக்கும் அதி நவீன **"கவுரி" (Ghauri)** என்னும் ஏவுகணையை பாகிஸ்தான் இராணுவம் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.
- **குறிப்பு:**
  - கடந்த ஏப்ரல் மாதம் பாகிஸ்தான் சுமார் 700 கி.மீ தூரம் வரை சென்று தாக்கும் **"பாபர்"** ஏவுகணையை பரிசோதித்தது குறிப்பிடத்தக்கது.

- **இந்தியா மற்றும் இரஷ்யா** ஆகிய நாடுகளின் மாணவர்களுக்கிடையே **புத்தாக்கம் (Innovation)** தொடர்பான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்தியாவின் அடல் புத்தாக்க திட்டம் **(Atal Innovation Mission)** மற்றும் ரஷ்ய கூட்டமைப்பின் சைரஸ் (SIRIUS) ஆகிய இரண்டும் பரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

## விளையாட்டு நிகழ்வுகள்

- அர்ஜெண்டினாவின் **பியூனஸ் அயர்ஸ்** நகரில் நடைபெற்று வரும் இளையோர் ஒலிம்பிக் போட்டியில் **(Youth Olympic)**, பெண்களுக்கான 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் ஹரியானாவைச் சேர்ந்த **மனுமாக்கர்(Manu Bhaker) தங்கப் பதக்கம்** வென்றுள்ளார்.

○ இந்தியா இதுவரை 2 தங்கம், 3 வெள்ளிப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

- இந்தோனேசியாவின் ஜகர்த்தாவில் நடைபெற்று வரும் **ஆசிய பாரா ஒலிம்பிக் போட்டியில்** ஆடவருக்கான **ஈட்டி எறிதல்** பிரிவில் இந்தியாவின் **சந்தீப் சௌத்ரி சுமார் 60.01மீ தூரம் எறிந்து,** இந்தியாவுக்கு உலக சாதனையுடன் முதல் தங்கத்தை பெற்றுத் தந்துள்ளார்.

## முக்கிய தினங்கள்

- உலக விண்வெளி வாரம் **(WSW – World Space Week)** அக்டோபர் 4 – அக்டோபர் 10
  - ○ உலக விண்வெளி வாரமானது, "அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் ஒரு சர்வேதச கொண்டாட்டம் மற்றும் மனித குலத்தின் நலனுக்காக அவற்றின் பங்களிப்பு" **(an international celebration of science and technology, and their contribution to the betterment of the Human condition)** என்ற நோக்கத்துடன் ஆண்டுதோறும் அக்டோபர் **4 முதல் அக்டோபர் 10 வரை** அனுசரிக்கப்படுகிறது.
  - ○ 2018 ஆம் ஆண்டின் கருத்துரு (Theme) **"விண்வெளி உலகத்தை ஐக்கியப்படுத்துகிறது" (Space unites the world)**
  - ○ டிசம்பர் 6, 1909 ஆம் ஆண்டு ஐ.நா பொது சபையால் உலக விண்வெளிவாரம் அக்டோபர் 4-10 என அறிவித்தது.
- குறிப்பு:
  - ○ அக்டோபர் 4, 1957 – பூமியின் முதலாவது செயற்கைக்கோள் ஸ்புட்னிக்-1 ஏவப்பட்ட நாள்
  - ○ அக்டோபர் 10, 1968- வெளிப்புற விண்வெளி ஒப்பந்தம் கையெழுத்தான நாள்

# பொருளாதார நிகழ்வுகள்

- உலக அளவில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தை கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது.
    - இந்திய பொருளாதார வளர்ச்சி, 2017-ம் ஆண்டில் **6.7** சதவீதமாக இருந்தது. நடப்பு ஆண்டில் இது, **7.3 சதவீதமாகவும்,** 2019-ம் ஆண்டில் **7.4 சதவீதமாகவும்** இருக்கும் என IMF கணித்துள்ளது.

We Shine Academy™